சார்பு நீதிமன்றம், மேட்டுப்பாளையம்

முன்னிலை : திரு.பெ.க. சிவகுமார்,

சார்பு நீதிபதி, மேட்டுப்பாளையம்

2022 ம் ஆண்டு நவம்பர் திங்கள் 16 ஆம் நாள் புதன்கிழமை

அசல் வழக்கு .92/2020

CNR.No. TNCB190002692020

1. திருமதி. பாப்பாத்தி
2. திருமதி. சாந்தி
3. திருமதி. பேபி
4. திரு. குமார்
5. திருமதி. செல்வி
6. திருமதி. புஜ்ஜம்மாள்

....வாதிகள்

-இடையே-

1, திரு. ராஜப்பன்

2. திருமதி. லவகுசா

3. திரு. மாதையன்

4. திரு. கே. ஆர். செந்தில்குமார்

5. திரு. ஆர். சஞ்சீவ்குமார்

....பிரதிவாதிகள்

இவ்வழக்கு இந்நீதிமன்றத்தின் விசாரணைக்கு வந்தபோது வாதிகள் தரப்பில் வழக்குரைஞர் திரு. மோகன்ராஜ், அவர்கள் முன்னிலையாகியும் பிரதிவாதிகள் 1 மற்றும் 5 தரப்பில் வழக்குரைஞர் திரு. கே. மணிவாசகம், அவர்கள் முன்னிலையாகியும் , 2 ம் பிரதிவாதி முன்னிலையாகாததால் ஒருதலைபட்சமாக்கப்பட்டும், 3 ம் பிரதிவாதி தரப்பில் வழக்குரைஞர் கே. சதீஸ், அவர்கள் முன்னிலையாகியும் 4 ம் பிரதிவாதி தரப்பில் வழக்குரைஞர் திரு. பி.

ராஜேந்திரன், அவர்கள் முன்னிலையாகியும் ஏற்கனவே இந்த வழக்கு லிஸ்ட்டில் போடப்பட்டிருந்தும் இறுதியாக இன்று இந்நீதி மன்றம் வழங்கும்.

தீர்ப்புரை

இந்த வழக்கானது கடந்த 02.01.1970, அன்று மேட்டுப்பாளையம் சார்பதிவகத்தில் 1/1970 ம் எண்ணிட்ட ஆவணமாகவும் கடந்த 19.08.2015, அன்று மேட்டுப்பாளையம் சார்பதிவகத்தில்6691/2015 ம் எண்ணிட்ட ஆவணமாகவும் , பதிவாகியுள்ள கிரைய ஆவணத்தை இல்லாநிலையது என்று விளம்புகை செய்யும்படியும், கடந்த 10.11.2018, அன்று மேட்டுப்பாளையம் சார்பதிவகத்தில் 9540/2018 ம் எண் ஆவணமாக பதிவான தான செட்டில்மெண்ட் ஆவணத்தை இல்லா நிலையது என்று விளம்புகை செய்யும்படியும் வழக்கிடைச் சொத்துக்களை I, II வது அட்டவணைச் சொத்துக்களை நலந்திகடு கண்டு பாகப்பிரிவினைசெய்து 8 சம பாகங்களாக பிரித்து அதில் தலா 1 பாகம் வாதிகளுக்கு வழங்கியும். வழக்கிடைச் சொத்துக்களை வழக்கு முடியும் வரை 3, 4, 5 பிரதிவாதிகள் எவ்வித வில்லங்க விவாகரங்களுக்கும் உட்படுத்தக்கூடாது என்று இடைக்கால உறுத்துக்கட்டளை பரிகாரம் வழங்கி உத்தரவிடவேண்டுமாய் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

Advocate Tr.Mohanraj, field vakalath for Plaintiffs. Adjournment petition filed and dismissed. P4 present. Already posted in the list. Hence suit is dismissed for default.

2022- ம் ஆண்டு நவம்பர் திங்கள் 16 ம் நாளாகிய இன்று திறந்த நீதிமன்றத்தில் அவையறிய பகரப்பட்டது.

P K SIVAKUMAR Digitally signed by P K SIVAKUMAR Date: 2022.12.06 17:46:30 +0530

சார்பு நீதிபதி,

மேட்டுப்பாளையம்.